செ.வெ.எண்:51 நாள்:26.01.2018

**அரியலூரில் நடைபெற்ற குடியரசு தினவிழாவில் 7 பயனாளிகளுக்கு ரூ.1 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் இன்று (26.01.2018) வழங்கினார்.**

அரியலூர் மாவட்ட விளையாட்டரங்கில் **"குடியரசு தினவிழா"** மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் விளையாட்டு திடலில் இன்று (26.01.2018) காலை 8.05 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் **தேசியக் கொடியை** ஏற்றி வைத்து, மரியாதை செலுத்தி, சமாதான புறாவினை பறக்கவிட்டார்கள். தொடர்ச்சியாக, காவல்துறையினர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்கள்.

பின்னர், இந்திய சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கும், அவர்களது வாரிசுதாரர்களுக்கும் கைத்தறி ஆடைகளை அணிவித்து கௌரவித்தார்கள்.

மேலும், மாவட்ட காவல்துறையின் சார்பில் வீரதீர செயல் புரிந்த 13 காவல்துறையினருக்கு பதக்கங்களையும், சிறப்பாக பணியாற்றிய வருவாய்த்துறையில் சிறப்பாக பணியாற்றிய 10 அலுவலர்களுக்கும், காவல்துறையில் சிறப்பாக பணியாற்றிய 5 அலுவலர்களுக்கும், தேசிய தகவலியல் துறையில் சிறப்பாக பணியாற்றிய **1** அலுவலருக்கும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் சிறப்பாக பணியாற்றிய 9 அலுவலர்களுக்கும், கல்வித்துறையில் சிறப்பாக பணியாற்றி 6 அலுவலர்களுக்கும், வேளாண்மைத்துறையில் சிறப்பாக பணியாற்றிய 2 அலுவலர்களுக்கும், கால்நடைப்பராமரிப்புத்துறை சிறப்பாக பணியாற்றிய 2 அலுவலர்களுக்கும தீயணைப்புத்துறையில், சிறப்பாக பணியாற்றிய 1 அலுவலருக்கும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையில் சிறப்பாக பணியாற்றிய 1 அலுவலர்களுக்கும், பொதுசுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத்துறையில் சிறப்பாக பணியாற்றிய 10 நபர்களுக்கும், நகராட்சித்துறை சிறப்பாக பணியாற்றிய 4 அலுவலர்களுக்கும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் சிறப்பாக பணியாற்றிய 2 அங்கன்வாடி பணியாளர்களுக்கு, ஐ.எஸ்.ஓ. தரச்சான்றிதழ் பெற்ற அங்கன்வாடி மைய 10 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும், 2015-16ஆண்டில் செயல்திறன் அடிப்படையில் 4 மருத்துவர்களுக்கு பதக்கங்களையும், விருதுகளையும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்கள்.

இவ்விழாவில், முன்னாள் படைவீரர் நலத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு வருடாந்திர பராமரிப்பு மானியம் தலா ரூ.25,000/- வீதம் மொத்தம் **ரூ.75,000** மதிப்பிலும், வேளாண் துறையின் சார்பில் 2 விவசாயிகளுக்கு மாவட்ட அளவில் நெல் விளைச்சல் போட்டியில் முதல் பரிசு தலா ரூ.15,000 வீதமும், மாவட்ட அளவிலான கடலை மற்றும் பயிர் விளைச்சல் போட்டியல் 2 விவசாயிகளுக்கு இரண்டாம் பரிசு தலா ரூ.10,000/- வீதம் மொத்தம் **ரூ.50,000** மதிப்பிலும் ஆக மொத்தம் 7 பயனாளிகளுக்கு **ரூ.1 இலட்சத்து 25 ஆயிரம்** மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் வழங்கினார்கள்.

மேலும், அஸ்தினாபுரம் மாதிரி பள்ளி சார்பில் தேசப்பற்று நடனமும், கோவிந்தபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி சார்பில் தேசப்பற்று நடனமும், ஜெயங்கொண்டம் பாத்திமா பெண்கள் மேல்நிலைப்பள்ளி சார்பில் தேசப்பற்று நடனமும், செந்துறை அரசு மேல்நிலைப்பள்ளி (மகளிர்) சார்பில் தேசப்பற்று நடனமும், இடையாதான்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சார்பில் சொற்பொழிவு, அஸ்தினாபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சார்பில் பரதநாட்டியம், அரியலூர் நிர்மலா பெண்கள் மேல்நிலைப்பள்ளி தேசப்பற்று நடனமும், வரதராஜன்பேட்டை டான்பாஸ்கோ ஆண்கள் மேல்நிலைப்பள்ளி நாட்டுப்பற்று நடனமும், கலைநிகழ்ச்சிகளும், காவல் துறையின் சார்பில் துப்பறியும் மோப்பநாய்களின் வீர சாகச நிகழ்ச்சியும் நடைபெற்றது, இக்கலைநிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்கள்.

பின்னர், விளையாட்டுத் திடல் வளாகத்தில் மரக்கன்றுகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் நட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர்.அபிநவ்குமார், இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை ஜி.கே.லோகேஷ்வரி, கோட்டாட்சியர்கள் (அரியலூர்) மு.மோகனராஜன், (உடையார்பாளையம்) ப.டினாகுமாரி, முதன்மை கல்வி அலுவலர் அ.புகழேந்தி, வட்டாட்சியர் சு.முத்துலெட்சுமி, துணை ஆட்சியர்கள் மற்றும் கல்வித்துறை, வருவாய்துறை, வளர்ச்சிதுறை, வேளாண் துறை, தோட்டக்கலைத்துறை, காவல்துறை ஆகியோர் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.